கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 242/2016

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 கமலஹாசன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 16.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எனது பிறந்த தேதி 27.12.1995 ஆகும். இந்த வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் எனது பாட்டா ராமசாமி தாக்கல் செய்துள்ளார். யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது பாட்டாவின் அண்ணன் நல்லப்பெருமாள் மீது தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கின் எண் என்ன என்றால் தெரியாது. நான் எந்த ஊரில் உள்ளேன் என்றால் கரூர் மாவட்டம், பள்ளத்துப்பட்டியில் உள்ளேன். நான் தற்போது எந்த ஊரில் உள்ளேன் என்றால் நான் பெங்களூரில் உள்ளேன். ஆனால் எனது சொந்த ஊர் பள்ளத்து பட்டி ஆகும். இந்த வழக்கு சொத்து அமைந்துள்ள கிராமத்தின் பெயர் என்ன என்றால் பண்ணப்பட்டி ஆகும்.

2. பள்ளத்துப்பட்டி எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் வெள்ளப்பட்டியில் அமைந்துள்ளது. எனது தாயார் பெயர் விஜயலெட்சுமி ஆகும். அவர் உயிருடன் தான் உள்ளார். எனது தந்தை பெயர் கர்ணன் ஆகும். நான் எனது பாட்டா ராமசாமியின் மகன் வழி பேரன் ஆவேன். எனது தந்தை உயிருடன் இல்லை. நான், எனது தாயாருடன் பள்ளத்துபட்டியில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். தற்போது நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்ன என்றால் கதவு எண்.11/11 ஆகும். யார் பெயரில் வீட்டு வரி ஏற்பட்டுள்ளது என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது. மேற்படி வீட்டின் சர்வே எண் என்ன என்றால் சரியாக நியாபகம் இல்லை. நல்ல பெருமாள் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் பள்ளத்துப்பட்டியை சேர்ந்தவர்.

3. நல்லப்பெருமாளுக்க எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள். அவர்கள் முறையே அழகுராஜா, இளையராணி மற்றொரு நபர் பெயர் நியாபகம் இல்லை. நல்லப்பெருமாளின் மனைவி பெயர் என்ன என்றால் நியாபகம் இல்லை. இவ்வழக்கின் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளது யார் என்றால் 9 ம் பிரதிவாதி ஆகும். அவர் எனது சித்தப்பா ஆவார். எனது சித்தப்பா தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது வாக்குமூலத்தில் உள்ள

விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த சர்வே எண்ணில் பிரச்சனை உள்ளது என்றால் சர்வே எண்.710/5 ஆகும்.

4. மேற்படி சர்வே எண்.710/5 ன் விஸ்தீரனம் என்ன என்றால் 2222 சதுரடி ஆகும். மேற்படி சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது பாட்டா ராமசாமிக்கு பாத்தியப்பட்டதாகும். எதன் அடிப்படையில் எனது பாட்டா ராமசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் பூர்வீக அனுபவத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்தாகும். ராமசாமி பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரமும் இல்லை என்றால் சரிதான். பட்டா மட்டுமே உள்ளது. நான் சொத்து யார் பெயரில் உள்ளது என்று வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி விவரங்கள் தெரியாமல் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. ராமசாமி மற்றும் நல்லபெருமாளுக்கு பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. எந்த வருடம் ஏற்பட்டது என்றால் வருடம் நியாபகம் இல்லை. பாகப்பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி பாகப்பத்திரத்தில் தாவா சொத்து கண்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து பாக பத்திரத்தில் காண்பிக்கப்படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்றால் தெரியவில்லை. தாவா சொத்து நல்லப்பெருமாள் கிரையம் வாங்கியது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கிற்கு பின்னிட்டு தான் தெரிந்து கொண்டேன். ராமசாமி 28.11.1958 ல் தாவா சொத்தை கிரையம் செய்தது பற்றி தெரியுமா என்றால் கிரையம் செய்ததாக கூறுகிறார்கள். அதற்கான கிரைய பத்திரத்தை பார்த்தேனா என்றால் இல்லை.

6. மேற்படி கிரைய பத்திரத்தில் எந்த சர்வே எண் கண்டு எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய காலத்தில் எனது பாட்டா ராமசாமியின் வயது 13 என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னை விட வயதானவர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ள நிலையில் அவர்கள் ஏன் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் வயோதிகத்தின் காரணமாக வரவில்லை. இவ்வழக்கில் என்னை விட வயதானவர்களுக்கு இவ்வழக்கு விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். எனது பாட்டா ராமசாமி எப்போது திருமணம் செய்து கொண்டார் என்றால் அது பற்றி தெரியாது. எனது பாட்டா ராமசாமி எப்போது இறந்தார் என்றால் கடந்த 2023 ம் வருடம் ஆகும்.

எனது பாட்டா ராமசாமி உயிருடன் இருந்த போது தாவா சொத்தை பாகப் பத்திரத்தில் ஏன் சேர்க்க வில்லை என்று ஆட்சேபனை எதுவும் ஏழுப்பி உள்ளாரா என்றால் தெரியாது.

7. பொதுவாக சொத்து யார் கிரையம் பெற்றார்களோ அவர்களுக்கு தான் பாத்தியம் என்றால் சரிதான். பட்டாவும் அவர்கள் பெயரில் தான் ஏற்படும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே என்ன உள்ளது என்றால் சர்வே எண்.710/4 உள்ளது. சர்வே எண்.710/4 யை இவ்வழக்கின் தாவா சொத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு வடக்கே என்ன உள்ளது என்றால் கிழமேல் தார் ரோடு உள்ளது. தெற்கே பன்னீர் என்பவரது நிலம் உள்ளது. பன்னீர் என்று கூறுவார்கள் அவரது சரியான பெயர் தெரியவில்லை. மேற்கே இருதய மேரி மற்றும் பாலசுப்பிரமணி ஆகியோரது நிலங்கள் உள்ளன. மேற்படி சொத்து ஆதீயில் யாருக்கு பாத்தியம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.710/4 என்ற சொத்து நல்லபெருமாள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

8. சுப்பிரமணி மற்றும் அவரது மனைவி தனலெட்சுமி பெயரில் உள்ளது. மேற்படி சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் தனலெட்சுமி பெயரில் உள்ளது. சர்வே எண்.710/4 ற்கு கிழக்கே யார் உள்ளார் என்றால் தெரியாது. தாவா சொத்து காலிமனையாக உள்ளதா என்றால் இல்லை. தேங்காய், விரகு,குப்பை குழி போட்டுள்ளோம். தாவா சொத்திற்கு அருகில் உள்ள நான்குபுறத்திலும் எனக்கு பாத்தியபட்ட சொத்து உள்ளதா என்றால் இல்லை. நான் இருப்பது பள்ளத்துப்பட்டி, வெள்ளப்பட்டி கிராமம் என்றும், தாவா சொத்து பண்ணப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் குப்பை குழி யார் போடுவது என்றால் நான் தான் போடுகிறேன்.

9. தாவா சொத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் தெரியுமா என்றால் தெரியும். அகலம் இரண்டு புறமும் 7 மீட்டர் ஆகும். கிழமேல் 7 மீ மற்றும் தென்வடல் 30.8 ஒரு புறமும், மறுபுறம் 28.2 ஆகும். மேற்படி அளவுகள் நான் நிலபுல வரைபடத்தை பார்த்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரிதான். பூஸ்துதியில் மேற்படி அளவுகள் உள்ளதா என்று தெரியாது என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**